# ஆய்வுக் களஞ்சியம்



பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை

லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

ிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் 'A' தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.

பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்

பதிப்பாசிரியர் : செல்வி ம.காயத்ரி

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

# உள்ளடக்கம்


| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | - யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. | ச.கவிதா | - சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | - வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | - சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | - தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | - திணைமரபு | 26 |
| 7. | கோமதி | - சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | - சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | - ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | - தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | - சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூரியா. ர | - விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | - அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | - சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | - புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | - புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | - அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

18. கா.புவனேஸ்வரி - சங்க கால
உணவு முறைகள்
19. அ.மகபூபு - சில சங்ககால ஊர்பெயர்களும்
அதற்கான காரணங்களும் 86
20. மகேஸ்வரி - சிறுகதை இலக்கியம் 91
21. து.விசாலாட்சி - வா.மு.கோமுவின் 95
சிறுகதைகள் - ஒரு பார்வை
22. ஜெ. வினோதினி - குறுந்தொகையில் 99
செவிலி நற்றாய் நிலை
23. வேணுகோபால் - வண்ணநிலவன் சிறுகதைகள் 104
உணர்த்தும் சமுதாயப் பதிவுகள்
24. நா.ஸ்ரீ பிரியா - நற்றிணையில் பழக்க 107
வழக்கங்கள்
25. ஷரிமளாதேவி - காட்டுப் பூக்களின் கானங்கள் 111
115

# சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை

பா.சதீஷ் குமார்
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

மனித இனம் தனக்கென ஒரு நல்வழியை எப்போதும் பின்பற்றும் இயல்பினை உடையது. அதில் பக்தி மார்க்கம் சிறப்பிடம் வகிக்கிறது. மனிதன் கடவுளை உருவாக்குகிறானா? கடவுள் மனிதனை உருவாக்குகிறதா? என்ற பகுத்தறிவுப் பார்வைக்கு அப்பாற்பட்டு காலத்திற்கு ஏற்றார் போல பக்தி மார்க்கம் பரிணமித்துக் கொண்டே இருக்கிறது. பக்தி இலக்கியங்கள் தோன்றிய காலகட்டத்தில் அவரவர் விரும்பும் சமயத்தைப் (பெரும்பாலும் சைவம், வைணவம்-தமிழ்தும்) பின்பற்றினர். கடவுளின் பிரச்சாரத்தை தேவாரம், பிரபந்தம், பாடிப்பரப்பினர் தன் கடவுள் மேல் வைத்திருக்கும் அன்பை புலவர்கள் வெளிப்படுத்தினர். அதோடு மட்டுமல்லாமல் கடவுளிடத்து அன்பு செலுத்தாதவர்களை வசைபாடவும் செய்தனர். அதில் நன்றாக இயங்கும் உறுப்புகளைக் குறைபடுத்திச் செவிடன், குருடன், போன்ற சொற்களால் வசைபாடுகின்றனர். இதில் செவிடு என்ற ஊனக்குறிப்பினை இக்கட்டுரை ஆய்கிறது.

**ஊனமில்லாத மனிதப்பிறப்பு**

மனித இனம் குறைபாடு உடையது அல்ல, உடலளவிலும், மனதளவிலும் காலத்துக்கு ஏற்றார் போல தன்னை மாற்றிக் கொண்டே வரும். ஆனால் மனிதன் ஊனத்தோடு பிறந்து குறைபடுத்திக் கொண்டே இருக்கிறான். ஊனமில்லாத மனிதப்பிறப்பு மிகவும் அரிதாகும். இதைத்தான் ஔவையார்,

“அரியது கேட்கின் வரிவிடி வேலாய்
அரிது அரிது மானிடம் ஆதல் அரிது
மானிடம் ஆயினும் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது”

இவ்வரிகள் அம்மையாரின் அனுபவத்தையும் மனநிலையையும் விளக்குவதாக அமைகின்றன. திருமூலர் உடலானது ஊனமில்லாமல் இருக்க,

“தெளிதரும் இந்தச் சிவநீர் பருகில்

ஒளிதரும் ஓராண்டில் ஊனம் ஒன்றில்லை
வளிஉறும் எட்டின் மனமும் ஒடுங்கும்
களிதரும் காயம் கனம் அதாமே"

என்று கூறுகிறார்.

தெளிவினை உடைய சிறுநீரைச் (சிவநீர்-அமுரி-சிறுநீர்) குடித்தால் ஈராண்டிற்குள் உடம்பில் ஒரு வகை ஒளி தோன்றும். உடலுக்கு ஒரு ஊனமும் ஏற்படாது என்று திருமூலர் கூறுகிறார். இவர்களின் கூற்றினை ஆராயும் போது ஊனமில்லாத பிறப்பின் சிறப்பையும், உடலானது ஊனம் ஏற்படாமலிருக்கும் வழியையும் கூறுகின்றார் என்பத தெளிவாகிறது.

திருஞானசம்பந்தர் திருஆமாத்தூர் பதிகத்தில்,

"............... ...............
ஆமாத்தூர் அம்மானைக்
கேளாச் செவியெல்லாம் கேளாச் செவிகளே"

என்று கூறுகிறார்.

இராவணனுடைய தோள்களைத் தனது பாதத்தால் வதை செய்த ஈசன் திருநாள் ஆதிரை. எனவே ஆதிரையான் என்று பெயரைச்சொல்லி நற்பேறு பெற்றவர்கள் சென்று வழிபடும் ஆமாத்தூர் மேவிய நாதனையும் அப்பெருமானுடைய சிறப்புகளையும் கேட்காத செவிகள் எல்லாம் பயனற்றதாகும் என்கிறார்.

இதே கருத்தையொத்து திருநாவுக்கரசர்,

"இளைய காலம்எம் மானை அடைகிலாத்
துளையி லாச்செவித் தொண்டர்காள் நும்முடல்
வ்ளையும் காலம் வலஞ்சுழி ஈசனைக்
களைக கணாகக் கருதிநீர் உய்ம்மிளே"

மனிதன் இளமைக்காலத்தில் சிவனுடைய புகழைக்கேட்காமல் இருந்தவர்களுக்கு இப்பாடல் அமைவதாக திருநாவுக்கரசர் பாடுகிறார். முதுமையில் தளரும்போது வலஞ்சுழிப்பெருமானைத் துன்பம் போக்குவதற்காக வழிபட வேண்டும் என்கிறார். சிவனின் புகழ் கேளாச்செவி எல்லாம் கேளாச் செவிகளாகும் என்று திருநாவுக்கரசர் கூறுகிறார்.

இவ்விருவரின் பாடல்களையும் நோக்கும்போது ஒரே கருத்தை வலியுறுத்துகின்றார். சைவ சமயத்தில் முழுமுதற்கடவுளாக சிவனை வணங்குகின்றனர். மேலும் சிவனைத்தான் உலகின் முதற்கடவுள் என்றும் கூறுகின்றனர். அக்கடவுளின் புகழைக் கேட்காத செவிகள் கேளாச் செவிகள் என்கின்றனர். இவர்களுடைய கருத்திலும் வினாக்குறிப்பு தென்படுகிறது. இறைவனின் புகழை கேட்கவில்லை என்றால் வேறு எதாவது காரணம் கூறி புகழைக்கேட்குமாறோ அல்லது அவர்களை

வெறுப்பதற்கு ஏதாவது ஒரு வசையையோ சொல்லியிருக்கலாம். அதைவிடுத்து நன்றாகக் காது கேட்கும் மனிதர்களைச் செவிடு என்று கூறி ஊனமாக்குகின்றனர்.

மாணிக்கவாசகர் திருவெம்பாவையில்,

“ ...............

மாதே! வளருதியோ? வன்செவியோ நின்செவி தான்?”

என்று பாடுகிறார்.

மாணிக்கவாசகர், சத்தியிடம் நான் சிவபெருமானை புகழ்ந்து பாடும்போது அதைக்கேட்டுக் கொண்டே கண்ணுறங்காமல் நின்றாய், உன்னுடைய காதுகள் என்ன வலிமையான காதுகளா? என்று கேட்கிறார். ஆனால் தெருவில் துதிக்கும் துதிகளின் ஓசையைக் கேட்காமல் மலர்ப்படுகையின் மீது படுத்து உறங்குகிறாய் என்கிறார். சத்தியின் இரண்டு செயலிலும் செவியானது முதன்மையான பங்கு வகிக்கிறது.

மேலும் மாணிக்கவாசகர் தன் காதுகளை வலிமையுடைய காதுகள் என்கிறார். திருப்பெருந்துரையில் எழுந்தருளியுள்ள சிவனைப் போற்றும்போது,

“வன்புராய் முருகி ஒக்குமஎன் சிந்தை
மரக்கன் என்செவி இரும்பினும் வலிது”

திருப்பெருந்துரையில் எழுந்தருளிய சிவபெருமானே! பிரமனும் திருமாலும் நெருப்பைச் சேர்ந்த மெழுகு போன்ற எலும்பையுடையவராய் அங்கே இருக்கும்போது வேறு யாரும் நிற்க முடியாத இடத்தில் என்னை மட்டும் ஏன் நிற்கச் சொல்லி அருளினாய், ஏனென்றால் என் மனம் மரத்தை விட வலிமையானது, என் கண் மரக்கண்ணை விடப்பெரியது என் செவியோ இருப்பினை விட வலிமையானது என்று கூறுகிறார். ஒரு மனிதரையோ கடவுளையோ தரிசிக்க வேண்டுமென்றால் மனம், கண், செவி என்ற மூன்றும் நன்றாக இயங்கினால் தான் நன்மையில் முடியும் என்ற கருத்தை இவரின் பாடலால் அறிய முடிகிறது.

திருமூலர் எழுதிய திருமந்திரம் சைவத்தின் மறை என்று அழைக்கப்படுகிறது. திருமந்திரம் முழுவதும் சிவபெருமானை வழிபடுதல், போற்றுதல், திருவடி சேரல் போன்றவைகளுக்கு வழியினைக் கூறுகிறது. இந்நூல் ஒன்பது தந்திரங்களின் வழியாக யாசிப்பவர்களுக்கு சிவனின் அருளை கிடைக்க வைக்கிறது.

திருமூலர் சிவனால் தனக்குக் கிடைத்த இன்பத்தை,

“காணாத கண்ணுடன் கேளாத கேள்வியும்
கோணாத போகமும் கூடாத கூட்டமும்”

என்று பாடுகிறார்.

திருமூலர் அனுபவித்த இன்பமானது கண்டும் காணாத காட்சியும், காதுகளில் கேட்டறியாத உபதேசமும், பிரிவு இல்லாத அறிவும், வெட்கப்படாத சுகமும் கூடிப்பிரியாத கூட்டமும், திருவடிப்போன சிவஞானமும் எனக்கு சிவபெருமான் அருளினான் என்று திருமூலர் கூறுகிறார். திருமூலர் அனுபவித்த இன்பத்தில் செவி என்ற உறுப்பும் பங்கு கொள்கிறது. ஒரு வேளை செவியினால் இன்பம் ஏற்படவில்லையென்றால் அது திருமூலருக்கு முழு இன்பத்தையும் தந்திருக்காது.

**சிவனின் திருவருளை அனைவரும் அறிந்திடும் நெறியை,**

**" ........................................**

**........................................**

**கண் இன்றிக் காணும் செவிஇன்றிக் கேட்டிடும்**

**அண்ணல் பெருமையை ஆய்ந்தது மூப்பே"**

என்று திருமூலர் கூறுகிறார்.

இறைவனானவன் ஆணுமல்ல, பெண்ணுமல்ல, பேடுமல்ல அறிவு மனம் செயலற்று நிற்கின்ற நிலையில் மனத்துள்ளே எழும் சோதியே இறைவன் என்கிறார். அவனுடைய அருளை அறிவால் மட்டுமே பெறமுடியும். அவ்வருளானது கண்ணில்லாமல் காணும், காதில்லாமல் கேட்கும் தன்மையுடையது, என்று திருமூலர் கூறுகிறார். இறைவனுடைய அருளின் தன்மையை உணர்வதற்கு காது என்ற உறுப்பும் பயன்படுகிறது.

திருமூலரின் இக்கருத்து மாணிக்கவாகசரின் கருத்தோடு ஒத்திருக்கிறது. மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகத்தில் சிவனின் சோதி உருவினைக்காண வலிமையான மனம், கண், காது மூன்றினையும் எனக்கு தந்து உதவினாயே என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். இதே கருத்தைத்தான் திருமூலர், சிவனின் அருளைப்பெற மனம், கண், செவி மூன்றும் இன்றியமையாமை என்கின்றார். அருளினைப் பெறுவதற்கும், உருவத்தினைக் காணவும் மனம், கண், செவி என்ற மூன்று உறுப்புகளும் மிகவும் இன்றியமையாமை எனத் துணியலாம்.

மேலும் திருமூலர் இறக்கப்போகும் உயிருக்கு இறைவன் தான் உற்ற துணை என்பதை,

"அழுகின்ற ஓர் உடம்பாகும் செவிகண்

குழிகின்ற கால விரதங்கள்..."

என்று குறிப்பிடுகிறார்.

உடம்பில் உள்ள காது, கண் எல்லாம் அழிந்து போகும் தன்மை உடையன. தான தருமங்கள், பேசும் வாக்கு, மூச்சு இழுத்துவிடும் இடப்பக்க வலப்பக்க நாடிகள் என எல்லாமே

அழியக்கூடியவை. இவை எல்லாம் அழியும் உடலைக் காப்பாற்றாது. இறைவனின் அருள் மட்டுமே உயிருக்குத துணையாகும் என்று திருமூலர் கூறுகிறார். உடல் அழியும்போது கண், காது போன்ற உறுப்புகளும் அழிந்துவிடும் என்பது எல்லா உறுப்புகளும் அழிந்துவிடும் என்ற பொருளை உள்ளடக்கிக் கூறுவதாகும்.

பெரியபுராணத்தில் தண்டியடிகள் நாயனாரின் வரலாறு கூறப்படுகிறது. இவர் திருவாரூரைச் சேர்ந்த கண் தெரியாத சிவபக்தர் நாள்தோறும் திருவாரூர் கோவிலை வலம் வந்து இறைவனை வழிபடுவதுதான் இவர் வழக்கம். கோவிலின் மேற்குப் பகுதியில் உள்ள தீர்த்தக்குளத்தை சமணர்கள் ஆங்காங்கே இடித்து தூர்க்கப்பட்டு குறைவடைந்திருக்கிறது. இதனால் குளத்தை பெரிதுபடுத்தி சீர்செய்வதில் முனைப்பாக இருக்கின்றார். அதைக் கண்ட சமணர்கள் மண்ணை வெட்டக்கூடாது. அதில் உள்ள உயிர்கள் மடிந்துவிடும் என்று கூறினார். சிவனுக்காக செய்யக்கூடிய அனைத்துக் காரியமும் அறமாகும் என்று கூறி தன் வேலையைத் தொடர்ந்தார். எரிச்சலடைந்த சமணர்கள் தண்டியடிகளை, கேட்பதாக அமையும் பாடலடிகள் பின்வருமாறு,

"..................
உரைப்பக்கேட்ட அறிவு இல்லார்
சிந்தித்து இந்த அறம்கோளாய்
செவியும் இழந்தாயோ என்ன"

கண் தெரியவில்லை என்றாலும் காதும் கேட்கவில்லையோ என்று கூறி அவரை ஏசுகின்றனர். பின் இறைவனின் அருளால் கண் பார்வை பெற்று மன்னரால் அச்சமணர்கள் வெளியேறினர். ஒரு செயலைச் செய்ய வேண்டாம் என்று நிறுத்தம்போது அதையும் மீறிச் செய்தால் அவர்களை காது கேட்கவில்லையா? ஏன்று கூறும் வழக்கம் இன்றும் நடைமுறையில் உள்ளது. இதைத்தான் தண்டியடிகளின் வாழ்க்கையிலும் நடத்தியிருக்கின்றன.

சைவத்தின் பிரச்சாரக் களஞ்சியமான பன்னிரு திருமுறைகளிலும் காது பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஒருவரை ஏசும் இடத்தும், சிவனுடைய புகழைக் கேட்காவிடத்தும், கோளச்செவி என்று கேட்கும் செவியை ஊனப்படுத்தும் விதமாக பாடலைப் பாடுகின்றனர்.

**தொகுப்புரை**

1. சைவத்தின் பிரச்சார இலக்கியம் கடவுளின் அன்பையும் புகழையும் வெளிப்படுத்துகிறது.
2. ஊனமில்லாத மனிதப்பிறப்பு அரிது
3. திருமந்திரம் ஊனமில்லாமல் இருப்பதற்கு அமுரி என்ற மருந்தினை வழங்குகிறது.
4. இறைவனின் புகழினை கேட்காத செவிகள் கேளாது.

5. இறைவனின் அருள் கிடைப்பதற்கு மனம், கண், செவி மூன்று உறுப்புக்களும் இன்றியமையாததாகும்.
6. இறைவனின் புகழை உணராதவர்களை குருடு, செவிடு என்று வசைப்பாடுவது புலவர்களின் ஆற்றாமையை விவரிக்கிறது.

## குறிப்புகள்


1. தனிப்பாடல் திரட்டு, பக்.32-33.
2. ஞா.மாணிக்கவாசகன் (உ.ஆ), திருமந்திரம், பா.846.
3. திருஞானசம்பந்தர் தேவாரம், பா.180:3-4.
4. புலவர் பி.ரா.நடராசன் (உ.ஆ), திருநாவுக்கரசர் தேவாரம் பகுதி 2, பா.51(1) 3:1-4.
5. துரை.தண்டபாணி (உ.ஆ), திருவாசகம், திருவெம்பாவை, பா.1.
6. மேலது, செத்திலாப்பத்து, பா.4.
7. ஞா.மாணிக்கவாசகன் (உ.ஆ), மு.நூ.பா.1610.
8. மேலது, பா.1872.
9. மேலது, பா.2140.
10. வ.த.இராமசுப்பிரமணியம் (உ.ஆ), பெரியபுராணம் தொகுதி-4, பா.6-8:1-8.


❖




அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லி குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

ISBN: 978-93-86770-84-4

அறம் பதிப்பகம்